உ

ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி

"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"

அபிராமி பட்டர்

விஷூ வருடம் ஆடி 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2032 (16–07–2001)

வெளியீட்டாளர்

அருள்மிகு துர்க்காதேவி


இந்து தேவஸ்தானம்



மலர்: 2

இதழ்: 2

7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2.   TEL: (604) 521-3472



களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்கு உதவும் - அரியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன் தாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

## ஆலயமும் நாமும்

ஆலய வருடாந்த உற்சவத்துடன் இன்னுமொரு துர்க்காமஞ்சரி இதழ் மூலம் எமது ஆலய செயற்பாடுகளையும் ஒரு சில ஆன்மீகக் கருத்துக்களையும் தங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் பெருமை கொள்கிறோம். ஆலயம் நாம் ஏன் இந்த அன்னிய மண்ணில் ஆலயம் அமைத்தோம், அமைத்து என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்விகள் எமது மனங்களில் எழலாம். அதற்கு நாம் கூறும் ஒரே பதில் இறை நம்பிக்கை. நமது உடலில் எத்தனையோ உணர்வுகள் இருக்கின்றன அதில் முக்கியமான உணர்வுதான் பக்தி. அந்தப் பக்தியிலும் இறை பக்தி ஒன்றே நமது வாழக்கையை ஒழுக்க சீலர்களாக வாழ வழிகாட்டுகிறது. இறை பக்தியை நாம் வளர்க்க வேண்டுமெனில் நாம் ஆலயம் சென்று வழிபட வேண்டும்.

கடிகார முள்ளுடன் போட்டி போட்டு ஓடிக்கொண்டிருக்கும் நாம், எமது வாழ்க்கையில் எங்கே அமைதியைதேடலாம், என்று எம்மை நாமே கேட்போமேயானால் அது ஆலயமாகத்தான் இருக்கும். இந்து சமயத்தவராகிய நாம் தினமும் ஆலயம் சென்று வழிபட வேண்டும் ஆனால் இன்றைய இந்த அவசர உலகில் அது சாத்தியப்படாது எனவே செவ்வாய், வெள்ளி தினங்களிலோ அதுவும் முடியாதவர்கள் மாதம் ஒரு முறையோ ஆலயத்திற்கு சென்று வழிபாடு செய்வது நல்லது. கோவில் இல்லாத ஊரில் குடியிருந்தாலும் பாவம் அது போல் கோயில் இருக்கும் ஊரில் குடியிருந்து கொண்டு கோவிலுக்கு போகமல் விடுவதும் பாவம். இந்து சமயத்தில் வழிபாட்டு முறைகளை நான்காக எமது ஆன்றோர் வகுத்துள்ளனர் அதில் குறைந்தது ஏதாவது ஒரு வழிபாட்டு முறையையாவது நாம் ஆலயத்தில் செய்ய வேண்டும்.

இந்த முறையில் இங்கு வாழும் அம்பிகை அடியார்கள் ஆலயத்திற்கு தொண்டு செய்து இந்து சமயத்தையும் தமிழையும் பேணிப் பாதுகாத்து எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வரலாற்றுக் கடைமையில் எங்கள் ஆலயம் தன்னை முற்றாக அர்பணித்து வருவது அனைவரும் அறிந்ததே ஆகவே அன்புள்ள அம்பிகை அடியார்களே எமது ஆலயத்தில் நடை பெறும் தமிழ், சமய, யோக வகுப்புக்களில் சிறுவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் வந்து கலந்து கொள்ளுவது மிகவும் நல்லது. எமது ஆலயத்தில் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தேவையான புத்தங்களை தந்து உதவ விரும்பும் அடியார்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். வட அமெரிக்காவுக்கே மையமாக விளங்கும் எமது ஆலயத்திலிருந்து வெளியாகும் இந்த துர்க்கா மஞ்சரியை வெளியிடங்களில் இருக்கும் தங்கள் உறவினர்களுக்கு அனுப்புவதன் மூலமும் தங்கள் உறவினர்களிடம் இருந்து ஆக்கங்களை தருவதன் மூலமும் மஞ்சரியின் வளர்ச்சிக்கு உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆலயம் பணம் திரட்டும் ஒரு வியாபார நிலையம் அல்ல. ஆனால் ஆலயத்தை திறம்பட நடாத்துவதற்கும் ஆலயம் பெற்றிருக்கும் கடன்களை அடைப்பதற்கும் நிதி தேவைப்படுகிறது. நன்கொடைகள் மூலமும் மாதாந்த அங்கத்துவ பணம் சேர்ப்பதன் மூலமும் அபிஷேகம் அருச்சனைகள் செய்வதன் மூலமுமே நிதி திரட்டுகிறோம். இவ்வாறு திரட்டும் நிதி எமது ஆலயத்திற்காக நிர்வாகசபை பட்ட கடனை அடைப்பதற்கு போதுமானதல்ல. ஆகவே நாம் அதிஸ்டலாபசீட்டு ஒன்று நடாத்த தீமானித்துள்ளோம் அன்பர்கள் தம்மால் இயன்றவரை சீட்டுக்களை உள்ளூரிலும் வெளியுரிலும் விற்பனை செய்து தரும் படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## வருடாந்த திருவிழா உற்சவம்

ஆலயங்களில் நடை பெறும் விழாக்களில் வருடாந்த திருவிழா மிகவும் முக்கியமானது அதிலும் இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழா மிக மிக முக்கியமானது. இந்த திருவிழாக்காலங்களில் ஆலயம் ஒரு புதுப்பொலிவுடன் காணப்படும். கொடிக்கம்பத்திலிருந்து தீர்த்தக்கேணி வரைக்கும்

திருத்தவேலைகள் செய்யப்பட்டு பூச்சு வேலைகள் செய்யப்பட்டு ஆலய முகப்பில் வாழை தோரணங்கள் கட்டப்பட்டு ஊர்மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஆலயத் தொண்டில் ஈடுபட்டிருப்பர். திருவிழா நடந்து முடியும் வரைக்கும் ஆலயம் தெய்வீகக் களைகட்டியிருக்கும்.

திருவிழா ஆலயத்திற்கு ஆலயம் வேறுபட்டிருக்கும், பத்து நாள் தொடக்கம் இருபதைந்து நாடகள் வரைக்கும் திருவிழாக்கள் கொண்டாடப்படும். முதலாம் திருவிழா கொடியேற்றத் திருவிழாவாகும், திருவிழாவுக்கு விரதமிருக்கும் அடியார்கள் முதலாம் திருவிழாவன்று காப்புக்கட்டி விரதத்தை ஆரம்பிப்பர். அப்படியே ஒழுங்காக திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று அந்த ஆலயம் இஸ்தாபிக்கப்பட்ட நட்சத்திரத்தில் அன்று தேர்திருவிழா நடைபெறும். இப்படி திருவிழா நடைபெறும் நாட்களில் எழுந்தருளித் தெய்வம் தினமும் வீதி வலம் வருவது வழக்கம். வலம் வரும் சுவாமியைத் தொடர்ந்து ஆண்கள் பிரதட்டை செய்ய பெண்கள் அடியழிப்பர். ஒருசிலர் கற்பூரக்காவடி எடுப்பதுமுண்டு இவற்றை அனுஸ்டிக்க முடியாதவர்கள் விரதமிருப்பர். தேர் திருவிழா செய்பவர்கள் தமது வசதிற்கேற்ப நாதஸ்வரக் கச்சேரி காதாப் பிரசங்கம் என்று விமரிசையாகச் செய்வர்.

புலம் பெயர்ந்து வாழும் நமக்கு ஊருக்கு ஓர் ஆலயம் இல்லை என்றாலும் இந்த மாநிலத்தில் எமக்கென்று இருக்கும் ஒரே ஆலயம் துர்க்கை அம்மன் ஆலயம். எமது ஆலயத்தில் வருடம் தோறும், ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்ட தினமான ஆடிப்பூரத்தன்று தேர்த்திருவிழா செய்து வருகிறோம். எமது ஆலயத்திற்கு தேர் அமைந்த புதுமை யாவரும் அறிந்ததே. இந்த திருவிழாக்காலங்களில் நாம் எல்லோரும் ஒன்று கூடி திருவிழாக்களை பொது மக்கள் எல்லோரும் பகிர்ந்து செய்ய வேண்டும். அப்படி ஒன்று கூடிச் திருவிழாக்கள் செய்யும் போது இறையருளைப் பெறமுடியும். வேற்றுமைகள் எமக்கு என்றும் நன்மை அளிக்கப்போவதில்லை. திருவிழாக்கள் மரபுரீதியான தத்துவங்களை கொண்டதோடு தத்துவரீதியான பல விளக்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆகவே இந்த வருடாந்த திருவிழா உற்சவங்களை ஒற்றுமையாக பங்குகொண்டு, எமது ஆலய வளர்ச்சியிலும் சமுதாய வளர்ச்சியிலும் உங்கள் பங்களிப்புக்களை செய்ய வேண்டுகிறோம்.

ஆலய நிர்வாகசபை

## ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

தினம் தோறும் இரவு நேரப்பூசை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இராகு காலப்பூசை பிரதி செவ்வாய் தோறும் பகல் 2.00 மணிக்குநடைபெறும்.
ஆலயத்தில் அடுத்த முதல்மூன்று மாதத்திற்கு நடைபெற இருக்கும் விரதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 15-07-2001 | ஞாயிற்றுக்கிழமை | ஆனி 32ம் திகதி | கார்த்திகை விரதம். |
| 16-07-2001 | திங்கட்கிழமை | ஆடி 1ம் திகதி | ஆடிப்பிறப்பு ஏகாதசி விரதம் |
| 17-07-2001 | செவ்வாய்க்கிழமை | ஆடி 2ம் திகதி | முதலாவது ஆடிச்செவ்வாய். |

| | | | |
|---|---|---|---|
| 18-07-2001 | புதன்கிழமை | ஆடி 3ம் திகதி | பிரதோஷ விரதம். |
| 19-07-2001 | வியாழக்கிழமை | ஆடி 4ம் திகதி | போதாயன அமாவாசை. |
| 20-07-2001 | வெள்ளிக்கிழமை | ஆடி 5ம் திகதி | ஆடி அமாவாசை விரதம். |
| 23-07-2001 | திங்கட்கிழமை | ஆடி 8ம் திகதி | நாகசதுர்த்தி ஆடிப்பூரம். |
| 24-07-2001 | செவ்வாய்க்கிழமை | ஆடி 9ம் திகதி | இரண்டாவது ஆடிச்செவ்வாய். |
| 25-07-2001 | புதன்கிழமை | ஆடி 10ம் திகதி | சஷ்டி விரதம். |
| 30-07-2001 | திங்கட்கிழமை | ஆடி 15ம் திகதி | பரிவர்த்தன ஏகாதசிவிரதம். |
| 31-07-2001 | செவ்வாய்க்கிழமை | ஆடி 16ம் திகதி | மூன்றாவது ஆடிச்செவ்வாய். |
| 01-08-2001 | புதன்கிழமை | ஆடி 17ம் திகதி | பிரதோஷ விரதம். |
| 03-08-2001 | வெள்ளிக்கிழமை | ஆடி 19ம் திகதி | சிரவண விரதம் பௌர்ணமி விரதம் வரலஷ்மி விரதம். |
| 07-08-2001 | செவ்வாய்க்கிழமை | ஆடி 23ம் திகதி | நான்காவது ஆடிச்செவ்வாய். சங்கடகர சதுர்த்தி விரதம் |
| 12-08-2001 | ஞாயிற்றுக்கிழமை | ஆடி 28ம் திகதி | கார்த்திகை விரதம். |
| 14-08-2001 | செவ்வாய்க்கிழமை | ஆடி 30ம் திகதி | கடைசி ஆடிச்செவ்வாய். |
| 15-08-2001 | புதன்கிழமை | ஆடி 31ம் திகதி | ஏகாதசி விரதம். |
| 16-08-2001 | வியாழக்கிழமை | ஆடி 32ம் திகதி | பிரதோஷ விரதம். |
| 18-08-2001 | சனிக்கிழமை | ஆவணி 2ம் திகதி | அமாவாசை விரதம். |
| 19-08-2001 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 3ம் திகதி | முதலாவது ஆவணிஞாயிறு |
| 22-08-2001 | புதன்கிழமை | ஆவணி 6ம் திகதி | விநாயக சதுர்த்தி விரதம். |
| 23-08-2001 | வியாழக்கிழமை | ஆவணி 7ம் திகதி | ஷஷ்டி விரதம். |
| 26-08-2001 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 10ம் திகதி | இரண்டாவதுஆவணிஞாயிறு. |
| 29-08-2001 | புதன்கிழமை | ஆவணி 13ம் திகதி | ஏகாதசி விரதம். |
| 30-08-2001 | வியாழக்கிழமை | ஆவணி 14ம் திகதி | பிரதோஷ விரதம். |
| 02-09-2001 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 17ம் திகதி | மூன்றாவது ஆவணிஞாறிறு பௌர்ணமி விரதம் |
| 08-09-2001 | சனிக்கிழமை | ஆவணி 23ம் திகதி | கார்த்திகை விரதம். |
| 09-09-2001 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 24ம் திகதி | நான்காவது ஆவணிஞாயிறு. |
| 13-09-2001 | வியாழக்கிழமை | ஆவணி 28ம் திகதி | ஏகாதசி விரதம். |

| | | | |
|---|---|---|---|
| 14-09-2001 | வெள்ளிக்கிழமை | ஆவணி 29ம் திகதி | பிரதோஷ விரதம். |
| 16-09-2001 | ஞாயிறுக்கிழமை | ஆவணி 31ம் திகதி | கடைசி ஆவணிஞாயிறு அமாவாசை விரதம். |
| 20-09-2001 | வியாழக்கிழமை | புரட்டாதி 4ம் திகதி | சதுர்த்தி விரதம் |
| 22-09-2001 | சனிக்கிழமை | புரட்டாதி 6ம் திகதி | சஷ்டி விரதம் முதலாவது புரட்டாதி சனி |
| 27-09-2001 | வியாழக்கிழமை | புரட்டாதி 11ம் திகதி | ஏகாதசி விரதம். |
| 29-09-2001 | சனிக்கிழமை | புரட்டாதி 13ம் திகதி | சனிப்பிரதோஷ விரதம் இரண்டாவது புராட்டாதி சனி |
| 01-10-2001 | திங்கட்கிழமை | புரட்டாதி 15ம் திகதி | பெளர்ணமி விரதம். |
| 05-10-2001 | வெள்ளிக்கிழமை | புரட்டாதி 19ம் திகதி | கார்த்திகை விரதம். |
| 06-10-2001 | சனிக்கிழமை | புரட்டாதி 20ம் திகதி | மூன்றாவது புரட்டாதி சனி. |
| 12-10-2001 | வென்னிக்கிழமை | புரட்டாதி 26ம் திகதி | ஏகாதசி விரதம். |
| 13-10-2001 | சனிக்கிழமை | புரட்டாதி 27ம் திகதி | கடைசி புரட்டாதிசனி |
| 14-10-2001 | ஞாயிற்றுக்கிழமை | புரட்டாதி 28ம் திகதி | பிரதோஷ விரதம். |

## ஆலயமும் விக்கிரகங்களும்

ஓர் உருவமும் ஓர் நாமமும் இல்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமங் கூறித்தெள்ளேனம் கொட்டாமே என்றார் மாணிக்கவாசகர். அத்தன்மையனுக்கு நாம் கொடுத்த வடிவமைப்பே விக்கிரகங்களாகும். மூலஸ்தான மூர்திகளுடன், பரிவாரமூர்த்திகளும் கருங்கல்லினாலும், எழுந்தருளுகின்ற விக்கிரகங்கள் ஐம்பொன்னினாலும், சிற்ப சாத்திர தெய்வாம்ச அளவுகளின்படி ஆக்கப்படுகின்றன. நவரத்தினக் கற்களைப் போன்றே கருங்கல்ளிலும் பற்பல வித்தியாசங்கள் உண்டு. நீரை உமிழுங்கல், தீயைத் தருங்கற்களுமுண்டு. மணியோசை தருங்கற்களில் இருந்தே ஆண் தெய்வங்களும், தாளத்தின் நாதம் போன்ற கருங்கல்லிருந்து அம்மன் விக்கிரகங்களும் சாமுத்திரிகா இலச்சணப்படி ஆக்கப்படுகின்றன. தெய்வ உபாசனை திருவுருவத் தியானமூலம் வழிபாடியற்றிய பின்பே சிலைகள் ஆக்கப்படுகின்றன.

அதர்வண வேத சுலோக மந்திரங்களின்படி இரேகை, எழுத்துக்கள், பிரணவம் அடங்கிய அந்தந்த மூர்திக்குரிய இயந்திரத்தகடுகள் பூசையில் வைக்கப்பட்டு மந்திர உருவேற்றிய பொன், செப்பினாலான தகடுகளைச் சுவாமி பிரதிஷ்டையின் போது விக்கிரகத்தின் அடியில் வைப்பர். ஆலயம் என்னும் போது சிற்ப யோக நூல்களின்படி ஆறு மண்டபங்களுடைய ஆலயமும் இயந்திரத் தகடுகளுடன் கூடிய விக்கிரகங்களும் இருப்பின் திருவருள் ஏற்படும். மேலும் பக்தி பூர்வமான மாகாகும்பாபிசேகமும் 48 நாட்கள் முழுமண்டல ஓமம் வளர்த்து இயல்புக்கேற்ப செய்யப்படுகின்ற மண்டலாபிசேகமும், அட்சரசுத்தியான நாமவளிகளாலும், அன்பு, தொண்டாற்றும் அடியார்களினாலுமே ஓர் சிறந்த ஆலயம் அமைகிறது.

## ஆலயமும் அபிஷேகமும்

ஆலயங்களில் எத்தனை விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்கிறோம் என்பது முக்கியமல்ல நித்திய பூசைகளுடன் அபிசேகஙகளும் இடம்பெறவேண்டும். நீரினால் மட்டும் அபிசேகம் செய்யலாம், ஆனால் அபிசேக திரவியங்களான எண்ணெய், அரிசிமா, மஞ்சள் மா, பஞ்சாமிர்தம், பால், தயிர் நெய், தேன், கரும்புச்சாறு, பழரசம், இளநீர், விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றுடன் கும்ப நீரினாலும் அபிசேகிக்க வேண்டும். அபிசேகத் திரவியங்களும் அதனால் ஏற்படும் பயனகளையும் பார்ப்போம்.

| திரவியங்கள் | பயன்கள் |
|---|---|
| நல்லெண்ணெய் | சுகம் |
| பஞ்சகௌவியம் | பரிசுத்தம் |
| பால் | நீண்ட ஆயுல் |
| இளநீர் | உயர் பதவி |
| தயிர் | மகப்பேறு |
| பஞசாமிர்தம் | வெற்றி |
| கரும்புச்சாறு | ஆரோக்கியம் |
| பழஇரசம் | இயம பயமின்மை |
| கும்ப நீர் | இலட்சுமிகரம் |
| புதிய பட்டு | வறுமை நீக்கம் |
| சந்தனம் | குளிர்ச்சி |
| பூக்கள் | உள்ளத் தூய்மை |
| தீபம் | முயற்ச்சி |

## பகவான் ஸ்ரீ சத்ய ஸாயிபாபா அருளியது

உங்கள் மனநிறைவுக்காக மானிடர்களாகிய நீங்கள் இறைவனுக்கு நாமமும் உருவமும் அளிக்கிறீர்கள். ஆனால் உண்மையில் அவருக்கு எந்த வடிவமும் கிடையாது. இருப்பினும் நீங்கள் அவரை வழிபடுவதற்காக அவரிடம் அன்பும் மரியாதையும் செலுத்துவதற்காக உணர்ந்து மகிழ்வதற்காக உங்கள் ஆன்மீக ஆசைகளை திருப்தி செய்வதற்காக அவர் வடிவம் எடுதிருக்கிறார். உங்களுடைய சொந்த மனநிறைவுக்காக அவருக்கு உருவமும் வடிவமும் அளித்து அவரை நீங்கள் வழிபடுகிறீர்கள். ஏதாவது ஒரு வடிவத்தை தேர்ந்தெடுத்து அதனிடம் இதய பூர்வமாக அன்பு செலுத்தி வழிபடும் ஒருவன் அழியாப் புகழ் அடைவான். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பொது அறிவுக்கல்வி பெறாதவர். ஆனால் ஆன்மீக அறிவு நிரம்பப் பெற்றவர். அவருடைய மனமும் (அன்பு) பொங்கி வழியும் இதயத்துடன் எப்போதும் அன்னை பராசக்தியிடமே ஒன்றியிறுக்கும். எந்த விதமான உலகக் கல்வியிலும் நாட்டம் இல்லாதவர். அன்னை ஆதிபராசக்தியை வழிபடுவதற்குத் தமது வாழ்நாள் முழுவதும் அர்பணித்தவர். மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபா மட்டுமே செலவவு செய்து வாழ்தவர். அனைத்து விதமான செலவுகளுக்கும் அதுவே அவருக்கு போதுமானதாக இருந்தது. கல்வியறிவை அவர் வளர்த்துக் கொள்ளாவிடினும் உலகம் முழுவதும் அவரைப் போற்றியது. எல்லா இடங்களிலும் ராமகிருஷ்ண மிஷன் இருப்பதைக் காணலாம். பிரபஞ்சம் முழுவதுமே அவரை மதித்துச் சிறப்பித்தது.

உலகில் உள்ள ஒவ்வொன்றும் இறைவனிடமிருந்து பெறப்படுவது தான். ஒவ்வொன்றும் இறைவனிடம் இருந்து வரும்போது நீங்கள் அவருக்கு அளிக்கக் கூடியது. என்ன இருக்கிறது. நீங்கள் அளிக்கக் கூடியது அன்பு ஒன்றுதான் அவர் எதிர்பார்ப்பதும் அதைத்தான்.

# அறிவுக்கு விருந்து

1. செருக்கைவிடப் பணிவுக்குதான் மதிப்பு அதிகம்.

2. சகமனிதரிடம் நாம் காட்டும் அன்பும் பரிவும் தான் உலகில் மிகவும் தெய்வீகமானது

3. ஒரு தேசபக்கனை அவனுடைய நாட்டிலிருந்து விரட்டிவிடலாம். ஆனால் அவனுடைய உள்ளத்திலிருந்து அவனடைய தேசத்தை விரட்டமுடியாது.

4. மனவலிமை இல்லாதவர்கள் சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருக்கிறார்கள் மனவலிமையுள்ளவர்கள் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்கிறார்கள்.

5. கடமையை நிறைவேற்ற அன்பு, தைரியம், என்ற இரண்டு வழிகாட்டிகள் உள்ளன. இரண்டும் ஒன்று கூடிவிட்டால் ஒரு நாளும் வழி தவறுவதில்லை.

6. கடினம் என்று பிறர் கண்டதைச்செய்து முடிப்பவன் தான் திறமைசாலி. திறமையுள்ளவர்களால் கூடச் செய்ய முடியாததைச் செய்து முடிப்பவன் மேதை.

7. விதி என்பது என்ன? நாம் விதைப்பதை நாம் அறுவடை செய்கிறோம். நம் விதியைப் படைப்பவர்கள் நாமே. பழியோ பாராட்டோ வேறு எவரையும் சாராது.

8. மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்தமாட்டான்.

9. எம்மை நாம் மதிக்கக் கற்றுக்கொண்டால் நாம் நினைப்பதைவிடப் பன்மடங்கு அதிகமாகவே எமது வாழ்க்கைத் தரம் உயரும்.

10. நல்ல பழக்கத்தை எல்லாச் சூழ் நிலைகளிலும் விடாப் பிடியாகப் பின்பற்றினால் நிச்சயம் முன்னேற முடியும். நேர்மை, ஏழ்மை, உழைப்பு, நேரம் தவறாமை, சிக்கனம், இவற்றைக் கடைப்பிடித்தால் முன்னேற்றம் தடையின்றி வரும்.


11. சகித்துக் கொள்ள வேண்டியது ஏராளமாவும், மகிழ்ச்சியை அனுபவிப்பது மிகக் குறைவாகவும், உள்ள நிலையில் தான் எங்கும் மனிதவாழ்வு காணப்படுகிறது.


12. சர்க்கரையும் மணலும் ஒன்றாய்க் கலந்திருக்கலாம். ஆனால் எறும்பு மணலை நிராகரித்துவிட்டுச் சர்க்கரையை எடுத்துச்செல்கிறது. அது போலவே தூய்மையானவர்களும் நல்லதைக் கெட்டதிலிருந்து பிரித்து எடுப்பார்கள்.

13. தன் நம்பிக்கை இருந்தால் ஒருவரிடமிருந்து உண்மை பிறக்கும். உண்மையுள்ள மனத்திலிருந்து அன்பு பிறக்கும். எல்லோரையும் அன்புடன் நேசித்தால் வாழ்க்கையில் அதி அற்புதங்களைச் சாதிக்கலாம் மகிழ்ச்சியுடன் வாழலாம்.

14. நாம் சாப்பிடும் உணவு சுத்தமான நிலத்திலிருந்தா கிடைக்கிறது. இதே போல் தான் நாமும் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் இதயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வோம். வெற்றியைக் கற்பனை செய்வோம். திட்டமிட்டுச் செயல் புரிவோம் கடவுள் உதவிபுரிவார். வெற்றிபெறுவோம்.

(தொகுப்பு- இணுவைக்குமாரன்)


யோகம்
நியதி
பயிற்சி
ஒழுக்கம்
பண்பு
அப்பியாசம்
பிராணாயாமம்
தியானம்
தன் வயத்தது
பிறர் உறவு
உடல் இயக்கம்
உணர்வு ஒடுக்கம்
சித்த தெளிவு
அன்பு
அறம்
பஞ்ச பூதங்கள்
பஞ்ச ஏந்திரியங்கள்
பஞ்ச நாதங்கள்
மாறுபாடு இல்லாத உண்டி
உண்டது செரித்தல்
அற்றது மலம் கழித்தல்
அளவறிந்து உறங்கல்
ஒண்பொருள் காழ்ப்ப இயற்றல்
ஆதியன
இனியவை கூறல்
செய்நன்றி அறிதல்
நடுவு நிலைமை
பொறையுடைமை
அழுக்காறாமை
ஆதியன
நீர்
நிலம்
நெருப்பு
காற்று
ஆகாயம்
மெய்
வாய்
கண்
மூக்கு
காது
ஓம் கணபதி ஓம்
ஓம் நமசிவாய
ஓம் சிவாயநம
ஓம் சிவசக்தி ஓம்
ஓம் சரவணபவ ஓம்


Yoga
Regimes
Practices
Discipline
Ethics
Exercises
Breath
Meditation
Self Control
Relationships
Physical
Sensory
Cosmic
Love
Virtue
Posture
Vibration
Rhythm
Nerves
Neurons
Mind
Grace
Will
Consciousness

# யோக ஏறு வரிசை

யோகப் பயிற்சியை சில பல ஆசிரியர்கள் எட்டு விதி முறைகளாக வகுத்துப் படிப்படியாகக் கடைபிடிக்க வற்புறுத்திக் கூறுவர். அவையாவன 1.இயமம் 2. நியமம் 3. ஆசனம்
4. பிராணாயாமம் 5. பிரத்தியாகாரம் 6. தாரணம் 7. தியானம் 8. சமாதி.

நாம் இங்கு நம் மரபு முறைப்படி யோகத்தை ஐந்து படிகளாகப் பிரித்துப் பார்ப்போம். பெரும் பெருந் தவப்பொருட்களை ஐந்தாகப் பகுத்துத் தொகுப்பது நம் முன்னோர், முதியோர், மேலோர் உலககோர் கையாண்ட முறையாகும். எல்லாவற்றிக்கும் தலையாக நம் எல்லோரதும் ஆசான் பொய்யா மொழிப் புலவன் உபதேசங்களை எடுத்துரைக்கும் ஆறும் அ.'.தேயாகும். தத்துவ ரீதியில் நோக்குங்கால் வள்ளுவரின் சொல்லாட்சியில் 'ஐந்து' என்ற வார்த்தைக்கு எல்லாம் (அனைத்தும்) எனவும், 'ஏழு' என்ற வார்த்தைக்கு எண்ணற்றது எனவும் பொருள்படும். ஐம்பெரும் பூதங்கள் என்றால் எல்லாப் படைப்பும், பிரபஞ்சமும் என்றாகும். ஐம் பொறிகள் என்றால் பூரண உணர்வுகளுமாகும். தன் குழந்தைகளாகிய நாம், தான் சொல்வதை இலகுவாக புரிந்து, அறிந்து, கிரகிக்கும் பொருட்டு எல்லாவற்றையும் ஒரு கை விரற் கணக்குக்குள் அளந்து, அரிந்து, அடுக்கி, அடக்கி, அமைத்து விளக்கினார் போலும்.! அதோடு சொற் தொடர் ஐந்துக்குள் இருப்பின் எளிதில் விரைவாகக் கற்று அறிந்து கைவிரல் மடித்து மனனம் செய்து இரைமீட்டு உட்கொண்டு புறப்பொருள் அகப்பொருள் கொள்ளச் சுலபம் அன்றோ.

யோகம்: - ஒன்றே ஒன்று -சாமாதி ( முக்தி, மோட்சம், சும்மா இருத்தல்)

யோகம்: - இரண்டே இரண்டு -தியானம், சமாதி

யோகம்: - மூன்றே மூன்று -ஆசனம், தியானம், சமாதி,

யோகம்: - நான்கே நான்கு -பண்பு, ஆசனம், தியானம், சாமாதி

யோகம்: - ஐந்தே ஐந்து -ஒழுக்கம், பண்பு, ஆசனம், தியானம், சமாதி

ஆசனம் என்பது - யோக அப்பியாசமும் பிராணாயாமமும்
- உடலை யோக முறைப்படி அசைத்து இருத்துவது
- மூச்சை யோக முறைப்படி இழுத்தும் அடக்கியும் விடுவது

தியானம் - சித்தத்தை சித்தத்தால் சித்தத்துள் இணைப்பது
- சித்தத் தெளிவு

சாமாதி - இரண்டறக்கலத்தல்
- மெய்க்காட்சி

# அந்தர் யோகத்ததில் கேட்ட கதை

அந்தர் யோகம் என்றால் உலகை விட்டு கொஞ்ச நேரம் என்றாலும் தனித்து இருத்தல் என்று பொருள். இது மனத்தை அடக்கும் சாதனை நெறி பிராத்தனை, நாடிசுத்தி சந்தேகம் தெளிதல், தியானம் பணிந்து கேட்டல் என்பன போன்ற பல நிகழ்வுகள் அந்தர் யோகத்தில் இடம் பெறும். அடியேன் ஆத்மஜோதி முத்தையா நடத்திய அந்தர் யோகம் பலவற்றில் கலந்து கொண்டிருக்கிறேன். அதில் அவர் ஒரு கதை சொன்னார். கதை என்றால் இட்டுக் கட்டின கதைல்ல. உண்மையான கதை. " யாழ்பாணத்துப் பையன் ஒருவன் பன்னிரண்டு வயதில் அப்பா

அம்மாவோடு கோபித்துக் கொண்டு கொழும்பு போய் அங்கிருந்து கதிர்காமம் போய்ச்சேர்ந்து விட்டான். அப்போ ராமகிருஷ்ணர் மடம் ஒன்று இருந்தது. அப்போது தீர்த்தானந்தா என்று சுவாமி ஒருவர் இருந்தார். அவரிடத்தில் போய் சொன்னான் " சுவாமி! நான் வீட்டில் கோபித்துக் கொண்டு வந்து விட்டேன். எனக்கு ஏதாவது வேலை தாருங்கோ" என்றான் அதற்கு சுவாமிகள், " அடே இந்த மடத்தில் இரு நீ இதில் இருந்து வேலை செய்தால் உனக்கு ஒரு காலத்தில் எல்லாம் கை கூடும் என்று சொன்னார். அவனுக்கு நல்ல சந்தோசம். சுவாமி அவனை நல்ல கண்ணும் கருத்துமாக பார்த்து வந்தார். அவனும் பையன் துடிப்பான பையன். அவன் நல்லா தன் வேலை போல் மடத்தில் வேலை களைச் நன்றாக செய்வான்.

ஒரு முறை ஒரு சிங்கள முதாலாளி அம்பலாந்தோட்டையில் உள்ளவர் அன்னதானம் செய்வதற்கு ஒரு லொறி நிறைய சாமானும் ஏற்றிக் கொண்டு ஒரு பென்ஸ் காரில் வந்தார். அவர் அங்கு இருந்து அந்த பையன் செய்யும் வேலை எல்லாம் பார்த்தார். அவருக்கு ஒரு ஆசை வந்து விட்டது இப்படி ஒரு பையன் என்னுடைய கடைக்கு இருந்தால் எவ்வளவு சம்பாத்தியம் இருக்கும் என்று யோசித்து பையனைக் கூப்பிட்டுக் கேட்டார், " தம்பி நீ எந்த ஊராடா என்று அதற்கு அவன் நான் யாழப்பாணம் என்றான். இங்கு எவ்வளவு சம்பளம் தருகிறார்கள் என்று கேட்டார் அதற்கு அவன் நான் சம்பளத்துக்காக வரவில்லை அப்பா அம்மாவுடன் கோபித்துக் கொண்டு இங்கு வந்தேன் சுவாமி எனக்கு இருக்க இடம் சாப்பாடு தந்தார் அதற்காகத்தான் இங்கு இருக்கிறேன் என்றான்.

அதற்கு அந்த முதலாளி சொன்னார் "அடே நீ சம்பளம் இல்லாமல் ஏன் இங்கு இருக்கிறாய், எனக்கு இரண்டு மூன்று கடை இருக்கிறது. நீ என்னோடு வந்தால் உனக்கு ஒரு சம்பளம் போட்டு அதை ஒரு சேமிப்பு புத்தகத்தில் வைத்தால் அதனைக் கொண்டு நீ உரு முதலாளியாக வரலாம் " அப்படி என்று ஆசை வார்த்தை சொன்னார். அவனுக்கும் வந்து இரண்டு வருடமாகிவிட்டது ஒரு மாற்றம் தேவைப்பட்டது சுவாமிக்கும் சொல்லிக் கொள்ளாமல் அந்த பென்ஸ் காரில் ஏறி அம்பலாந்தோட்டைக்கு போய்விட்டான்.

அங்கே கடையிலே பத்து வருடம் உழைத்தான். பத்து வருடம் உழைத்த பிறகு அவனுக்கு அப்பா அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது இப்போ அவன் இருபத்தினாங்கு இருபத்தைந்து வயது வாலிபனாகி விட்டான் ஒரு நாள் முதலாளியைக் கேட்டான் " முதாலாளி எனக்கு அப்பா அம்மாவை பார்க்க ஆசையாக இருக்கிறது நான் ஊருக்கு போய்விட்டு வருகிறேன்" என்றான். அதற்கு அந்த முதலாளி " அட உனக்கு இங்கு நிறைய சம்பளப் பாக்கி இருக்கிறது கொடுக்க வேண்டும் சரி நீ போறதற்கு மாத்திரம் காசை எடுத்துக் கொண்டு போ, பிறகு நீ திரும்பி வந்ததும் நான் கணக்கு பார்த்து காசு போட்டு வைக்கிறேன்" என்றார். அவனுக்கு அப்பா அம்மா அவர்களின் நினைவு வந்தவுடனே உழைச்சதையும் நினைக்கவில்லை. வேறு ஒன்றும் நினைவுக்கு வரவில்லை உடனே அவன் போய்விட்டான். அவன் வீட்டுக்குப் போய் சில வருடங்களுக்குப் பின் ஒரு நாள் தாயாரிடம் கேட்டான் " அம்மா எனக்கு பத்து வருடம் உழைத்த காசு இருக்கிறது நான் போய் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று தாயாரிடம் கேட்டான் அதற்கு தாயார் " அட நீ இவ்வளவு நாளும் உழைச்சது போதும் நீ செத்த பிள்ளை என்று தான் நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தோம் நீ திரும்பி வந்திருக்கிறாய் நீ ஒரு இடமும் போக வேண்டாம் அது தொலைந்தால் தொலையட்டும்" என்று சொல்லி அவனை மறித்தார்கள். அவனும் இப்போது பெற்றோர் சொல்லை தட்டவில்லை. அவனும் அம்பலாந்தோட்டை செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டான்.

முதாலாளி இருந்தாற் போல இறந்து விட்டார் முதலாளியின் மகன்தான் கடைக்கு முதாலாளியாக வந்தார். இரண்டு மூன்று வருடங்கள் கழித்த பின் முதலாளியின் மகன் நித்திரையில் ஒரு கனவு கண்டான். அது கனவா? உண்மை போல் இருந்தது. கனவு இதுதான் ஒரு மாடு வந்து முட்டும் இவன் விழித்தெழுந்தான் பின் நித்திரை கொள்ள திரும்பி வந்து மாடு முட்டும். அது இது என்னடா என்று நினைத்து எழுந்து தண்ணீர் குடித்துவிட்டு படுக்கலாம் என்று படுத்தால் அடுத்த மாடு வந்து குத்தும் இரவு முழுக்க அது விடவில்லை. தொடர்ந்து சில நாட்களாக அதே மாடு வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது.

இவனும் சில மந்திரவாதிகளிடமும் சோதிடர்களிடமும் போய் நடந்த கதைகளை சொன்னான் பரிகாரம் என்ன என்று கேட்டான் ஒருவரும் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை ஒரு தமிழ்

ஆள்தான் சொன்னான் " முதலாளி இந்தியாவிற்கு போனால் அங்கு ஒரு பெரியவர் இருக்கிறார். இதற்கு அவர் ஒரு வழி சொல்லுவார்" என்றார் இதைக் கேட்ட முதலாளியும் அவனையும் கூட்டிக் கொண்டு இந்தியா போனார். போய் அந்த சுவாமியின் முன் நின்றார்கள் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை. அந்த சுவாமிகள் முதலாளியை பார்த்து கேட்டார், உங்களுடைய கடையில் ஒரு யாழ்பாணதுப் பையன் வேலை செய்தவன் அல்லவா" என்று கேட்டார்.

அதற்கு அவனும் "ஆம்சாமி" என்று பதில் சொன்னான். "அவனுக்கு உங்களுடைய அப்பா சம்பளம் கொடுக்கவில்லை அல்லவா" அதற்கு அவன் "ஆம்சாமி" என்று சொன்னான் அதற்கு சுவாமிகள் " உன்னுடைய அப்பா இப்போது அந்தப் பையன் வீட்டில் மாடாய் பிறந்து உழைத்துக் கொண்டு இருக்கிறார். அவர்தான் வந்து தொந்தரவு செய்கிறார் என்றார். இதற்கு அவன் என்ன பரிகாரம் என்று சுவாமிகளிடத்தே விசாரித்தான். அதற்கு சுவாமிகள் "என்னவிலை கொடுத்தும் அந்த மாட்டை வீட்டில் கொண்டு வந்து கட்டு. ஒரு நாளைக்கு வீட்டுக்கு போற போது உன்னையும் அறியாமல் ஒரு இடைப் பழம் பழுத்த வாழை குலையைப் பார்ப்பாய். பிள்ளைகளுக்கு கொடுக்க என்று போகிற போது நீ அந்த மாட்டைப் பார்ப்பாய் பார்த்தவுடன் பார்த்தவுடன் உன் அப்பாவின் எண்ணம் வரும். உடனே அதைக் கொண்டு போய்க் கொடுப்பாய் மாடும் அதைத் தின்றவுடன் செத்துப் போகும் என்று இவ்வளவையும் துல்லியமாக சொல்லிக் கொடுத்தார்.

அவனும் ஊருக்கு வந்து அவனின் வேலைக்காரர் சிலருடன் யாழப்பாணம் போய் சோந்தான் கடையில் நின்ற பையனின் விலாசம் ஏற்கனவே அவனிடம் இருந்ததால் அவன் பையனின் வீட்டுக்கு போய் இறங்கினான். முதலாளியின் மகனைக் கண்டவுடன் பையனுக்கு பெரிய சந்தோசம். பென்ஸ் காரில் யாழப்பாணம் முழுவதும் சுற்றிப் பாாத்தார்கள் முதலாளி பையனுடைய வீட்டை நோட்டம் விட்டான் மாட்டைக் காணவில்லை இவன் அந்த பையனிடம் உங்கள் தோட்டம் எங்கு உள்ளது என்று கேட்டான். அதற்கு பையன் எங்கள் தோட்டம் அரை மைல் துாரத்துக்கப்பால் உள்ளது அதற்கு காரில் போக முடியாது நடந்து தான் போக வேண்டும் என்று கூறினான். அட இவ்வளவு துாரம் வந்து உங்களுடைய தோட்டத்தை பார்க்காமல் எப்படி போறது வா போவோம் என்று போனார்கள் அங்கு போனால் ஆஜானுபாகுவான மாடு ஒன்று கொட்டிலுக்குள் நிமிர்ந்து பார்த்துக் கொண்டு நின்றது. வந்தவனுக்கு இதுதான் மாடு என்று புரிந்து விட்டது. உடனே அவன் அந்தப் பையனிடம் கேட்டான் இந்த மாடு நல்ல மாடாய் இருக்கிறது இதை விலைக்கு எனக்கு தா என்று அதற்கு அந்தப்பையன் "ஐயோ அதை மட்டும் கேட்காதீர்கள் இந்த மாடு வந்த பின்பு தான் செல்வம் வீட்டில் கொழிக்குது அப்பாவும் விற்க விரும்பமாட்டார்". என்று கூறினான்.

முதலாளியும் நடந்த கதையெல்லாம் சொல்லி என் அப்பாதான் இந்த மாடாக பிறந்திருக்கிறார் இதனால் பெரிய தொல்லையாக இருக்கிறது. என்ன விலை என்றாலும் நீ எனக்கு தந்துதான் ஆகவேண்டும். இந்தா உன்னுடைய சம்பளப் பணம். இந்தா மாட்டிற்கு ஐந்தாயிரம் இதை எடுத்துக் கொண்டு மாட்டை என்னிடம் கொடுத்து விடு. இதற்கு மேலே பையன் மறுக்கவில்லை. காசை வாங்கிக் கொண்டு மாட்டைக் கொடுத்து விட்டான். முதலாளியும் மாட்டை ஏற்றிக் கொண்டு போய் வீட்டில் கட்டினான். சொன்ன மாதியே ஒரு நாள் பிள்ளைகளுக்கு என்று வாழைப் பழம் வாங்கிக் கொண்டு போனான். மாட்டைக் கண்டதும் தகப்பனார் நினைவுவர கொண்டு போய்க் கொடுத்தான். மாடும் அதைச் சாப்பிட்டு விட்டு மூன்று மணித்தியாலத்தில் செத்து போய்விட்டது.

முப்பத்தைந்து வருடங்களுக்கு முதல் நடந்த உண்மைக் கதையை ஆத்ம ஜோதி பத்திரிகையில் படித்த மித்திரன் ஆசிரியர், ஆத்தம ஜோதி முத்தையா அவர்களை விசாரித்து எழுதியதாகச் சொன்னார்.

மறுபிறப்பு என்பது எல்லோருக்கும் உண்டு அது அவர் அவரின் வினையின் பிரகாரம். இம்முறை மனிதராக நாம் பிறந்துள்ளோம். அடுத்த பிறப்பு மனிதனாகத்தான் பிறப்போம் என்று இல்லை. ஆடாய், மாடாய், நாயாய் இன்னும் என்னவோ வாகவும் பிறக்கலாம். இந்த உண்மை சம்பவம் அதனைப் புலப்படுத்தும். பட்ட கடனை கொடுக்காவிட்டால் மாடாய் பிறந்து கொடுக்க வேண்டும் என்று இந்த சம்பவத்தினூடே அந்த உண்மை புலப்படுகிறது.

வடிவேலு ஞானகாந்தன்

# சிந்தனை செய் மனமே !

ஔவை பிராட்டியார் திருமுருகப் பெருமானுக்குக் கொடுத்த பதிலைப் பார்போம்

" அரியது கேட்கின் தனிநெடு வேலோய்
அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"

இத்துடன் அவர் நிறுத்தவில்லை. கூன் குருடு செவிடு நீங்கப்பெற்றுப் பிறப்பதும் அரிது என்கிறார். அப்படிப் பிறந்துவிட்டால் அரிதான தானமும் தவமும் புரிந்து ஞானம் பெறலாம் என்கிறார். இறுதியில் மனமே உந்து சக்தியாக இருந்து தீர்மானிக்கிறது என்பதை ஆணித்தரமாகவே கூறிவிடுகிறார். மானிடராகிய நாம் எமது அரும் பெரும் பிறப்பின் சிறப்பை அறிவதில்லை. நாம் நம்மை புரிந்து கொள்ளுவதற்குப் பலகாலம் எடுக்கிறது. இதனால் நாம் நம்மை ஏமாற்றுவதுடன் பிறருக்கும் துன்பங்களைக் கொடுக்கின்றோம். நன்மை தீமை என்று பாகுபாடு காட்டி உணரச்செய்வது மனமே. மனச்சிந்தனைகள் பல திசைகளிலும் தலைதூக்குகின்றன. தீமைகளைக் கண்டால் வெறுத்துத் தள்ளுகிறோம். நன்மைகளைக் கண்டால் ஆனந்தம் அடைகின்றோம்.

மாணிக்கவாசகர் இறைவனை நினைத்து சிவபுராணத்தில் வாழ்த்தும் பொழுது தனது மனத்தில் ஒரு நொடியேனும் நீங்காத உன நினைவு வேண்டும். எனப் பாடியுள்ளார்.

" நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க,"

மனதில் என்றும் இறைவன் லயத்து இருக்கும் பொழுது அதைவிட ஆனந்தம் வேறு எதிலும் இல்லை என்பதை அறிந்தவர் அல்லவா.! அன்று பாரதப் போர் நடைபெற்றதனால் கீதாசாரம் உருவாகி எமக்கு இன்றும் புத்தி புகட்டிக் கொண்டிருக்கின்றது. அருச்சுனனின் மனம் சஞ்சலம் அடைந்ததாலேயே பகவத்கீதை உருவானது. மனம் தளர்ந்து போய் போர்களத்தில் போரை எதிர் கொள்ள முடியாத நிலையில் தவிக்கும் அருச்சுனனுக்குக் கண்ணபிராண் மனத்தைரியம் கூறுகின்றார். அதாவது மனச்சிந்தனைகளை ஒருமைப் படுத்தி, பரந்தாமன் தன்னிடம் சராணாகதி அடைவதின் விளக்கத்தை கீதையில் தெளிவாக்குகின்றார்.

"<u>நல்லாரைக்</u> காண்பதுவும் நன்று
நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்று.இவை ஔவைப்பாட்டியாரின் பொன் மொழிகள் நல்லாரோடு நல்லவர் இணைவது பூர்வீகப்புண்ணியப்பலன் என்று கருதலாம். அறிவு ஆற்றல் உள்ள மக்களும் இருக்கிறார்கள். அறிவு ஆற்றல் இல்லாத மக்களும் இருக்கின்றார்கள். ஒருமாநிலத்தில் உள்ளவர்கள் நல்லமனம் உள்ளவர்களாக இருந்தால் அம்மாநிலம் நல்ல முறையில் உயர்ந்திருக்கும்.கெட்ட மனம் உள்ளவர்கள் இருக்கும் இடம் சாக்கடை நிறைந்த தாழ்ந்த நிலையில் இருக்கும். இதைப் போன்றே குடும்பங்களும் உயர்ந்த நிலையிலும் தாழ்ந்த நிலையிலும் தோற்றமளிக்கின்றன.

மனிதனின் மனமோ ஒரு யந்திரத்தைப் போன்று இயங்கும் சக்தி வாய்ந்தது. மக்களை மக்களிடம் இருந்து பிரித்து உயர்நிலையை உணரச்செய்வது பகுத்தறிவே. பகுத்தறிவு இல்லாத மனிதனை மிருகத்திற்கு ஒப்பிடுவார்கள். ஏனெனில் அவன் புரியும் செயல்கள் மிருகத்தன்மை உள்ளவனவாக இருக்கும். பண்படுத்திய வயலில் விளையும் பயிர்கள் நன்றாக வளர்வது போல பரிசுத்தமான மனத்தில் உதிக்கும் எண்ணங்களும் நல்லதிறன் உள்ளவைகளாகச் செயல்படும் என்பது திண்ணம். உடல் ஆரோக்கியத்துக்கும் மனச்சிந்தனைகள் ஆதாரம் அளிக்கின்றன. மனத்திடத்துடன் நோயாளி மருந்தை உட்கொண்டு வருவானாகில் அவனது நம்பிக்கை அவனை விரைவில் குணமடைய வைக்கின்றது. எச்செயலையும் புரியும் பொழுது திடநம்பிக்கையுடன் செயல்பட்டால் அதில் தோல்வியை விடவெற்றி நிச்சயம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. சில சந்தர்ப்பங்களில் தோல்வியைத் தழுவினாலும் அதையும் வெற்றியாக்கும் மனத்திடன் அவனிடமிருக்குமானால் மறுகணமே தோல்வியை மறந்து விடுவான். மீண்டும். துள்ளி எழுந்து செயல்படுவதே குறிக்கோளாக இருப்பான்.

லௌகீக வாழ்க்கையில் மனிதனின் சிந்தனைகள் முக்கிய இடம்பெறுகின்றன. மனதில் அன்பு, அடக்கம்,சுயநலம் கருதாமை, தெய்வநம்பிக்கை இவை அனைத்தும் முக்கிய கருவிகளாக அமைகின்றன. இவை உள்ள மனிதர்கள் வாழும் குடும்பங்கள் கோவிலாக மிளிர்கின்றன. திருவள்ளுவரும் அன்பின் பெருமையை

"அன்புக்குண்டோ அடைக்கும் தாள்"

எனக் குறளில் விளக்கியுள்ளார். அன்பானது உருவமற்ற பொருளாக இருந்து மனத்தினின்றும் மிளிரும் சமயம் மனிதனுக்குத் தனி அழகைக் கொடுக்கின்றது உலகில் அன்புக்கு அடிபணியாதார் யாருமில்லை. மனத்தில் கோபம் என்ற கொடுரமான எண்ணம் உதிக்க நாம் அடம் அளிக்க நாம் இடம் அளிக்கக் கூடாது. கோபம் தனிமனிதனைப் படுகுழியில் விழுத்திவிடும். தன்னை விழுத்துவதும் அல்லாமல் மற்றையோரையும் மனவேதனைக்கு உட்படுத்தும். நான் எனது என்ற அகங்காரத்தை முற்றாகவே எரித்து விட வேண்டும். ஆணவம், கர்மம், மாயை என்ற மூன்று மலங்களும் எம்மை பிடித்துக் கொள்ளுவதற்கு மன்தின் எண்ணங்ளே காரணமாக அமைகின்றன. கோபம் வரும் காரணத்தை தானே உணமுடியுமானால் கோபத்தை அடக்கும் வல்லமையை பெற்றுவிடலாம். ஏமது பசியை ஆற்றுவது போல மனதின் போபத்தை ஆற்றப் பழகுவது மேல் அல்லவா.!

ஒரு மாளிகையை எவ்வளவு சிரமத்துடன் பலநாட்கள் முயற்சி செய்து கட்டிமுடிக்கின்றார்கள். தகர்பதானால் ஒரு நாளில் தாகர்த்துவிடலாம். இதைப்போன்றே எமது மனத்தின் அன்பில் உருவாகும் மாளிகையும் அமைகின்றது. அன்பு வார்தைகளால் உருவாகிய மாளிகை அரை நொடியில் சுடுசொற்களால் உருக்குலைத்துவிடும். இத்தகைய சக்திவாய்ந்த எமது மனம் கர்வம், பேராசை, அகங்காரம் தீய சக்திகள் ஆகும். முனதின் சிந்தனா சக்தி எத்தனை ஆயிரம் மைகளுக்கு அப்பாலும் நினைத்தமாத்திரதில் சென்று திரும்பும் சக்திவாய்தது. கவிஞர்களை எடுத்தால் அவர்களின் சிந்தனாசக்தி மண்ணிலும் விண்ணிலும் பறந்து சென்று கவிதைகளை வாரிவழங்குவதைக் காணலாம். ஞானிகள் தங்கள் யோக நிஷ்டயினால் இடம் விட்டு இடம் செல்லும் வல்லமை பெற்றிருந்தனர்.

தெய்வமும் குழந்தையும் ஓன்றென்று பெரியோகள் சொல்லுவார்கள். குழந்தைமனம் களங்கமற்றது. பின்னர் வளரும் பொழுது சூழ்நிலைக்கு ஏற்ப எண்ணங்களை மனதில் உருவாக்கி விடுகின்றது. சூழ்நியை உருவாக்கியவர்கள் பெற்றோர்கள். எனவே பிள்ளைகளின் மனவளச்சியில் முக்கிய கவனம் செலுத்தப்ப வேண்டியவர்கள் தாய் தந்தையரே. பரிசுத்தமான நீர்ஊற்றப் போன்ற குழந்தை உள்ளம் சாக்கடையில் விழாமல் வழிகாட்டுவது பெரியோகளின் கடமை எனக்கருத்தில் கொள்ளவேண்டும். மக்கள் எச்சமயமானாலும் சமயப்பற்று இருப்பது அவசியம். மன ஒருமைபாட்டிக்குச் சமயமும் வழிவகுக்கின்றது. நமக்கு ஏற்படும் நன்மைதீமைகள் எதனால் உருவாகின்றன எனச் சிந்திப்போமானால் எமது மனமே முதற் காரண கருவியாக இருக்கும். நல்ல சிந்தனைகளையும் கெட்ட சிந்தனைகளையும் சிருஷ்டித்துக்கொள்ளும் மனம் இதனால் விளையும் நன்மைகளையும் தீமைகளையும் ஏற்கவேண்டிய நிலையில் உள்ளது. மனித சுபாவம் நன்மைகளை எற்கவேண்டிய நிலையில் உள்ளது. மனித சுபாவம் நன்மைகளை ஏற்கவும் தீமைகளைப் புறக்கணிக்கவும் விருப்பு உடையது. தீமையினால் பல அல்லல்கள் உருவாகின்றன. அல்லகளை மனம் ஏற்றுக்கொள்ள மறுப்பதினால் பல சண்டை சச்சரவுகள் வீட்டிலும் உருவாகின்றன.

ஒருவன் மனம், புத்தி, சித்தம் என்ற நிலையைக் கடந்து அப்பாற் செல்லமுடியுமானால் அவனுக்கு ஆத்ம தரிசனம் இலகுவில் கிட்டும் ஸ்தூல, சூக்கும காரணசரீர நிலையில் தான் மனம், புத்தி சித்தம் செயல்படுகின்றன. ஸ்தூல சூக்கும காரண சரீர நிலையில் மனம் செயல்படும் நிலையை முற்றிலும் உணர்ந்தவன் இறைவனின் பரிபூரணமாண சத் சித் ஆனந்தம் ஆன பரமானந்த நிலையை நன்கு அறிவான்.

மனம் ஒருமைபடப் பல வழிமுறைகள் உள்ளன. பூசை ஜெபம் தியானம் பிராணயாமம் என்பன ஒருவகையில் எமக்கு உதவுகின்றன. பூசையில் கிரிகைகள் அடங்குகின்றன. நாம் ஜெபம் செய்வது சிறந்த முறையாக அமைகிறது. ஓடித்திரியும் மனத்தை இறுகப்பிடித்து ஒருநிலையில் நிறுத்தித் தியானம் பயில சில நாட்கள் செல்லும். நம்மிடையே சிலர் சாத்வீக குணமும் சிலர் ரஜோகுணமும் சிலர் தமோ குணமும் உள்ளவர்களாக இருக்கின்றனர். அவரவர் செயலைப் பொறுத்தே குணங்கள் அமைகின்றன. சரிகை, கிரிகை, யோகம், ஞானமார்க்கங்களைக் கடைபிடித்த. நால்வருமே மனத்துாய்மையான திடத்தினாலேயே இறைவனின் தரிசனம் பெற்றனர். மக்கள் துாய்மையான மனத்துடனும் தெய்வீகச் சிந்தனைகளுடனும் செயற்பட்டால் வாழக்கையில் நிம்மதி அடைவதுடன் மகிழ்ச்சியும் அடைவார்கள் என்பது திண்ணம்.

ஸ்ரீலங்கா கொள்ளுபிட்டி சித்தி மத்திய நிலையத்தில் வீற்றிருக்கும் லலிதாம்பாளின் ஹாடாஷாத்தினால் வன்கூவர் துர்க்கை அம்மன் ஆலயம் தரிசிக்கப்பெற்றேன். துர்காதேவியிடம் மனம் லயிக்கப் பெற்று அம்பிகையின் பாதங்களை நம்பியே மனதில் பதித்தேன்,சரணாகதியடைந்தேன் உலகெல்லாம் பரவியிருக்கும் அடியார்களுக்கும் அருள்புரிவாய் தாயே.

துர்காதேவி சரணம்

லோகநாயகி சற்குணநாதன்

## வணங்கப்பட வேண்டியவர்கள் வதைக்கப்படுகிறார்கள்

கடவுளைக் கும்பிட்டால் காசு தருவார் வசதிகள் எல்லாம் தருவார் உண்மையான கடவுள் என்று நினைத்துக் கல்லுச் சிலைக்கு அபிஷேகம் ஆராதனை செய்யப்படுகிறது. ஆனால் கடவுளே மனித உருவங்களாகத் தாய் தந்தையராக எம்மைப் படைத்து(பெற்று) காத்து(வளத்து) இந்த உலகிலே நாம் மனிதர்களாக. வாழ வழி வகுத்த உண்மையான தெய்வங்களுக்கு வதை நடக்கிறது.

புராணக் கதைகளிலே பிள்ளையாரின் மாம்பழக் கதையைத் தெரியாத சைவமக்கள் இருக்க முடியாது. ஆனால் அதன் அர்தம் தெரியாதவர்கள் எத்தனைபேர்? உலகத்தை சுற்றி வந்தாலும் பேரும் புகழும் பணமும் பெற்றாலும் தாய் தந்தையரின் பெருமையை அறியாமல் வாழ்பவர்கள் இறைவனின் அனுக்கிரகத்தை சிறிளவாவது பெறமுடியாது தாய் தந்தையரின் ஆசீர்வாதம் யாருக்கு கிடைக்கிறதோ அவர்களுக்குதான் இறைவனின் பேரருள் கிடைக்கினறது.

ஏங்கள் ஒவ்வொருவருக்கும் தாய் தந்தையை நிர்ணயித்தவர் இறைவனேயாவர் இறைவன் தாய் தந்தையர் உள்ளே இருந்துகொண்டு அவர்கள் மூலமாக எம்மைப் படைத்துக் காக்கும் செயல்பாட்டைச் செய்கிறார் இந்த அரிய உண்மையை அறிந்த பெரியோர்கள் தாய் தந்தையே எமது முதல் ஆலயம். அவர்களே நாம் வணங்க வேண்டிய முதல் தெய்வங்கள் என்ற உண்மையை எமக்கு உபதேசித்தவர்கள். உதாரணமாக காற்றிலே ஆவியுருவிலும், நிலத்திலே ஈரமாகவும், உயிரினஙகள் மரம் செடிகள் எல்லாவற்றிலும், கடல் குளம் நதி எங்கும் தண்ணீர் உண்டு ஆனால் எமது தேவைக்கு கிணற்றிலோ அல்லது பைப்பிலோதான் எடுக்க முடியும். அதேபபோல இறைவன் எங்கும் நிறைந்திருக்கறான். ஆனால் அவனுடைய அருளை புனித ஆலயங்களிலும் மந்திரங்களினால் உருவேற்றி வைத்திருக்கும் ஆலயங்களிலும் பெறலாம்? ஆனால் இந்த அருளைப் பெறுவதற்கு தாய் தந்தையரின் ஆசீர்வாதம் இல்லாதவர்களால் முடியவே முடியாது.

தாய் தந்தையை மதித்து வணங்காத மனிதருக்கு ஆலயங்களில் மந்திரத்தால் உருவேற்றி வைத்திருக்கும் தெய்வீக அலையானது அவர்களுககு எந்த நன்மையும் அளிக்காது. புதிலாக ஆலயத்தின் புனிதம் சிறிது குறைந்து விடும். ஆனால் தாய் தந்தையை வணங்கும் பக்குவம் உள்ளவர்கள் இறைவனின் நேரடி அருளைப் பெறுகிறார்கள். இப்படியானவர்கள் ஆலயத்துக்கு செல்லும் போது ஆலயத்தில் உள்ள தெய்வீக அலை அதிகரித்து ஆலயத்தை புனிதமாக்கும்.

தாய் தந்தையரை இங்கு வரவழைத்து அவர்களைத் தெய்வம் போல் போற்றி அவர்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் வாழவைக்கும் பிள்ளைகளையும் மருமக்களையும் அடியேன் பார்த்திருக்கிறேன். இப்படியான பிள்ளைகள் மருமக்களின் வாழ்வும் அவர்கள் பிள்ளைகளின் சந்ததிகளும் சிறப்போடும் செழிப்போடும் விளக்கும். ஆனால் தாய் தந்தையரை இங்கு வரவழைத்து அவர்களை அரசாங்க படிப்பணத்தை பெறும் பிணைப் பொருளாகப் பாவித்து வீட்டிலே சிறைக் கைதிகளாக்கி வதைக்கும் கொடுமை? இப்படியான பிள்ளைகளுக்குத் தெரியவில்லை தாங்கள் செய்வது தமக்கே எதிர்காலத்தில் வரப்போகின்றது என்று.

பெற்றோரை மதிக்காதவர்கள் ஆலயத்துக்குச் சென்று அர்ச்சனை அபிசேகம் அன்னதானம் திருவிழா என்று எதைச் செய்தாலும் இறைவனின் அருள் துளிகூடக் கிடைக்காது. பதிலாக

ஆலயத்தின் தூய்மையும் புனிதமும் இவர்களால் குறைந்துவிடும் ஆனால் தாய் தந்தையரின் பாதங்களைத் தொட்டு வணங்குபவர்கள் ஆலயத்துக்கு சென்று செய்யும் பூசையை இறைவன் மிகுந்த மகிழச்சியோடு ஏற்கிறார். அத்தோடு அவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அளிக்கிறார். இந்த ஆழமான தோந்தத்தை அறிய வைப்பதுதான் உண்மையான சமய சேவை. இந்த வேதாந்தத்தை அறிந்து வாழ்வதுதான் உண்மையான சமய வாழ்க்கை. புட்டப்பர்தியிலே பகவான் சாயி பாபா தனது பிறந்த தினங்களிலே காலையில் தனது பெற்றோரின் சாமாதிக்குச் சென்று எண்ணெய்வைத்தே முழுகச் செல்வார். புல சாயி பக்த்தர்கள் தாய் தந்தையரைத் தினமும் வணங்கிப் பேரருள் பெற்று வாழ்கிறார்கள். இதை அறியாது தாய் தந்தையரை மதிக்காமல் பஜனை செய்வதாலும் யாத்திரை செய்வதாலும் பயன் ஏற்படமாட்டாது. தாய் தந்தையை வதைப்பவர்கள் எதிர்காலத்தில் தங்கள் பிள்ளைால் வதைபடப் போவதை நினைத்தால் உண்மையில் வேதனைதான். இவர்கள் அறியாமல் கொடுமைப் படுத்துகிறார்கள். தாயதந்தையரோ பிள்ளை பாசத்தால் வெளியில் சொால்ல முடியாத வேதனை. தாய் தந்தையைக் கொடுமைப்படுத்துபவர்கள் தங்களுக்குள் கணவன் மனைவி உறவில் போலியாகவும் ஒற்றுமை இல்லாமலும் நாய்கடி பூனைகடியாக பிரச்சனையோடு சச்சரவோடு வாழ்கிறார்கள். இதனால் இவர்களது பிள்ளைகளது வாழ்வும் பணம் இருந்தாலும் பாழாகிவிடும் பணம் பணம் என்று அலைவதனால் பாவச் செயலகள் அதிகரிக்கின்றன.தொடர் மாடிக் கட்டிடங்களில் வாடகைக்க இருக்கும்போது குளிர் தெரிவதில்லை மின் விளக்கு வெளிச்சம் குறைவதில்லை. தினமும் குளித்துச் சுத்தமாக இருக்க முடிகிறது. ஆனால் சரியான வசதி வருமுன்பு மற்றவர்களைப் பார்த்து பேராசையால் வீட்டை வாங்கி குளிரிலும், மங்கிய இருளிலும் அரை குறை குளிப் போடும் சுத்தமில்லாமல் மாட்டை விடக் கேவலமாக இரண்டு வேலை செய்து ஓய்வில்லாமல் அலைந்து கொண்டு எதைக் காணப்போகிறார்கள்?.

இத்தனை காரணத்துக்கும் முதல் காரணம் “ அறிவில்லாப் பெண்டாட்டி” இதைத்தான் ஔையார் பாடினார் எல்லாவற்றிலும் மிகக் கொடியது பேயைவிடவும் கொடியது “அன்பில்லாப் பெண்டிர்” அன்பில்லா தவனிடத்தில் அறிவு சிறிதும் இருக்காது நல்அறிவு சிறிதும் இருக்காது தனது மகனுக்கு கொழுத்த சீதனம் வாங்க வேண்டுமென்று அலையும் பெற்றோர்களே இன்று அதிகமாக வேதனைப் படுகிறார்கள். பெண் எடுக்கும் பெற்றோர்கள் சீதனப் பேராசையால் தங்கள் வாழவுக்கு தாங்களே மண் அள்ளிபோடுகிறார்கள்.

பெண்பிள்ளைக்குச் சீதனம் கொடுத்து கௌரவத்தை உயர்த்த நினைக்கும் பெற்றோர் தர்மம் செய்யாமல் சேர்த்த பணத்தை சீதனமாக கொடுத்து என்ன பயன்? தனது மகளை பண்புள்ளவளாக, அடக்கம் உள்ளவளாக குடும்பத்தை பொறுப்போடு நடத்துபவளாக, ஒவ்வொரு காரியங்களைம் செய்யும் போது அதன் பலன் எப்படி ஆகும் எனும் புத்திக் கூர்மை உள்ளவளாக வளர்த்து விடும் பெற்றோர்பளே சிறந்த பெற்றோர்கள்.

காம ஆசைக்கு காதல் எனும் பெயரைவைத்து தமக்கே பொறியை வைக்கிறார்கள் ஆண் பிள்ளைகள். பேண்பிள்ளைகளுக்கு சேர்த்துக் கொடுக்க வேண்டிய சீதனம் பண்பு, பணிவு நல்லடக்கம், புத்திக்கூர்மை. இந்தப் பண்புகள் உள்ள பெண்ணே வீட்டுக்கு மகாலட்சுமியாக வீட்டைக் கலகலப்பாக பிரகாசிக்கச் செய்வாள். நற்பண்பு புத்திக்கூர்மை இல்லாத ஒரு பெண் உங்கள் வீட்டில் மருமகளாக நுழைந்தால் உங்கள் வீட்டில் அலங்காரமான பேய் நுழைகிறது என்று புரிந்து கொள்ளுங்கள். நல்ல பெண் குடம்பத்துக்கு வாய்த்தாலும் புத்தி இல்லாத மாமியார் அமைந்து விட்டால் அந்த வீடும் நரகமேதான். வீட்டில் பெண்ணா பேயா?.

நன்றி
அடியார் விபுலானந்தா
(நாம் தேடும் உண்மைகள்) பாகம் 1

# ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருளுரை

உடலுடையவர்களால் புலன்விஷயங்களின் பால் விருப்பும் வெறுப்பும் உணரப்படவே செய்கின்றன. ஆனால் புலன்கள், அவற்றின் விஷயங்கள் இவற்றிற்கு ஒருவன் அடிமையாகக் கூடாது. ஏனெனில் தன்னுணர்வுப் பாதையில் இவை தடைக்கற்களேயாம்.

கிருஷ்ணஉணர்வில் இருப்பவர்கள் ஐம்புலன் நுகர்ச்சியில் ஈடுபட இயற்கையாகவே விருப்பமற்றவராக இருக்கின்றனர். ஆனால் அத்தகு உணர்வில்லாதோர் சாத்திரங்களின் சட்டதிட்டங்களைப் பின்பற்றவே வேண்டும். கட்டுப்பாடற்ற புலன் நுகர்ச்சியே ஜடச்சிறைக்குக் காரணம் ஆனால் சாஸ்திரங்களின் சட்டதிட்டங்களைப் பின்பற்றுவன புலன் விஷயங்களில் சிக்குவதில்லை. உதாரணமாக கலவி இன்பம் கட்டுண்ட ஆத்மாவிற்குத் தேவையான ஒன்று என்பதால் திருமண உறவின் அத்தாட்சியின் கீழ் காமசுகம் அனுமதிக்கப்படுகின்றது. உதாரணமாக சாத்திரகட்டளைகளின் படி மனைவியின் தவிர வேறு எந்தப் பெண்ணுடனும் கலவி உறவு கொள்வது தடைவிதிக்கப்படுகின்றது. மற்றப் பெண்களை எல்லாம் தாயாக பாவிக்க வேண்டும். ஆயினும் இக்கட்டளைகளிலிருந்தும் கூட பிற பெண்களுடன் உடல்உறவு கொள்வதில் மனிதனுக்கு இச்சை எழுகின்றது. இத்தகு இயல்புகள் வேரறுக்கப்படவேண்டும். இல்லையேல் தன்னுணர்வுப் பாதையில் இவை தடைக்கற்களாகி விடும். ஜடஉடல் இருக்கும்வரை அதன் தேவைகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே அவற்றை அனுபவிக்கவேண்டும். இருப்பினும் இத்தகு அனுமதிகளின் கட்டுப்பாட்டை நாம் சார்ந்திருக்கக் கூடாது. பற்றற்று ஒருவன் இச்சட்டதிட்டங்களைப் பின்பற்ற வேண்டும். ராஜகாரியங்களில் கூட விபத்து ஏற்படுவது போல புலன்நுகர்ச்சியிலும் ஒருவன் வீணடிக்கப்படலாம். ஜட உறவின் காரணமாக புலனின்பம் நுகரும் ஆவல் நீண்ட காலமாய் இருந்து வருகின்றது. எனவே சட்டதிட்டத்திற்குட்பட்ட புலனின்பமும் ஒருவனை நிலைபிறழச் செய்யும் வாய்ப்புகள் உள்ளன. அதனால் விதிகளுக்குட்பட்ட புலன் நுகர்விற்கான பற்று எவ்வாறேனும் தவிர்க்கப்படவேண்டும். ஆனால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய அன்புத்தொண்டில் ஈடுபட்டவனின் செயல்களோ எல்லாவிதமான புலனின்பச் செயல்களினின்றும் ஒருவனைப் பற்றறச் செய்கின்றன. எனவே வாழ்வின் எந்நிலையிலும் கிருஷ்ண உணர்வினின்றும் விலகி நிற்க ஒருவன் எண்ணவே கூடாது. எல்லாவிதமான புலன் பற்றுக்களிலிருந்தும் விடுபடுவதன் முழுநோக்கமே கிருஷ்ண உணர்வு நிலையில் அமைவது தான்.

***கர்மயோகம் 34 ம் பாதம்*** **பகவத்கீதை**

# திருமுறைகள்

சிவனடி **மறவாச் சிந்தையரான** மெய்யடியார்கள் **பலர்** காலத்துக்குக் **காலம் இறைவன்** மீது அருட்பாசுரங்**கள்** பலவற்றைப் **பாடியுள்ளனர். இ**வற்றுள் திருஞானசம்பந்**தரின்** தேவாரப்பதிகங்**கள் தொடக்கம்** சேக்கிழார் பெருமா**னது** பெரியபுராணம் **வரை பாடப்பட்ட பாசுர**ங்கள் பலவற்றின் **தொகுப்பு** பன்னிரு திரு**முறைகளாகும். இ**த்திருமுறைகள் இந்**துசமய** மக்களால் **பெரிதும் போற்றப்பட்**டு வருகின்றன. **இவை** ஆலயங்களின், **இல்லங்களிலும்** தினமும் ஓதப்படுவை**யாகும்.** உள்ளத்தைத் **தூய்மை செய்யும்** தகைமை வாய்ந்த**வை.**

## 1. முதல் ஏழு திருமுறைகள்

சம்பந்தர், **அப்பர், சுந்**தரர் ஆகிய மூவரும் **பாடிய** பாடல்கள் ஏழு **திருமுறை**களாக வகுக்கப்பட்**டுள்ளன.** சம்பந்தருடைய **பாசுரங்கள் முதல்** மூன்று திருமுறைக**ளாகும்.** அப்பர் பாடியவை **அடுத்த மூ**ன்று பாசுரங்களாகும். **சுந்தரர்** பாடிய பாடல்க**ள் ஏழாந்திருமு**றையாகும். இம் மூவரு**ம் பாடிய** பாடல்கள் தே**வாரம் எனப்படும்.** இவற்றைத் தமிழ்வேத**ம் என** அழைப்பர். **தேவாரம் என்பதன்** பொருள் தெய்வத்**தின் மீது** அன்புடன் **பாடப்படும் இன்னி**சைப்பாடல் என்பதாகும்.

தேவாரம் **பாடிய மூவரும்** பல்லவ பேரரசர்கள் **ஆட்சிபுரிந்த** காலத்தில் **தமிழ்நாட்டில் வாழ்ந்த**வர்கள். அப்பரும் சம்**பந்தரும்** ஏழாம் நூற்**றாண்டிலும், சுந்**தரர் ஒன்பதாம் நூற்றா**ண்டிலும்** வாழ்ந்தவர்**கள். ஞானசம்பந்தர்** இயற்கையில் இறை**வனைக்** கண்டவர். **குழந்தை உள்ளம்** படைத்தவர். உலக அநு**பவத்தில்** திளைத்த **அப்பர் பல திரு**த்தாண்டங்கள் மனத்தை **உருக்கக்** கூடிய **வகையில் பாடியுள்ளார்.** சுந்தரர் இறைவனைத் **தோழமை** பாராட்டிப் **பல பாடல்களைப்** பாடியுள்ளார்.

## 2. எட்டாந்திருமுறை

**மாணிக்கவாசகர் பா**டிய திருவாசகமும் திருக்**கோவையும்** தான் **சொல்ல தில்லைப்** பெருமானே எழுதியதாகக் **கூறுவர்.** திருச்**சிற்றம்பலவனையே** பாட்டுத் தலைவனாகக் **கொண்டே** திருச்**சிற்றம்பலக் கோ**வையார் பாடியுள்ளார்.

## 3. ஒன்பதாம் திருமுறை

**திருவிசைப்பா**த் திருப்பதிகங்களும் சேந்தனா**ர் அருளிய** திரு**ப்பல்லாண்டும்** ஒன்பதாந் திருமுறைகளாகும். இ**ப்பாடல்கள்** சே**ந்தனார், திருமா**ளிகைத் தேவர் முதலிய ஒன்ப**தின்மரால் பாடப்பட்டவை**யாகும். இறைவனைப் பல்லாண்டு **வாழ்க என வாழ்த்திப் பாடும்** பாடல்கள் திருப்பல்லாண்டாகும்.

## 4. பத்தாந் திருமுறை

**திருமூ**லரது திருமந்திரமே பத்தாந் திரு**முறையாகும்.**

இது 3000 பாக்களைக் கொண்டது. இந்துசமயத் தத்துவங்களை விளக்குகின்ற பழைய தமிழ்நூல் இதுவாகும். இந்நூலில் செல்வம், கல்வி, மனஒருமை, ஒழுக்கம் முதலிய நல்வாழ்வுக்கான சாதனங்கள் நுட்பமாக விளக்கப்பட்டிருக்கின்றன. முப்பொருள், மூவகை உயிர்கள். மும்மலம், நால்வகைநெறிகள், திருநீறு, திருவைந்தெழுத்து, திருக்கூத்து ஆதியாம் சைவசித்தாந்தக் கருத்துக்களை தெளிவாக அறியமுடியும். அன்பே சிவம் என்பதே திருமந்திரத்தின் சாரமாகும்.

## 5. பதினோரந் திருமுறை

நாற்பது தோத்திர நூல்களின் தொகுதியே பதினோரந் திருமுறையாகும். இதில் முதலாவதாக விளங்குவது திருவாலவாய் இறைவனால் அருளிச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் திருமுகப் பாசுரம் ஆகும். இப்பாசுரம் பாணபத்திரனுக்கு உதவும்படி சிவபெருமானால் சேரன் பெருமாள் நாயனார்க்கு அனுப்பப்பட்ட திருமுகம் எனக் கூறுவர். இதைத்தவிரப் பட்டினத்தடிகள், காரைக்கால் அம்மையார், நக்கீரர், நம்பியாண்டார் நம்பி என்போர் உட்படப் பதினொருவர் பாடிய நூல்கள் இத்திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

## 6. பன்னிரண்டாந் திருமுறை

நம்பியாண்டார் நம்பி இராசராச சோழமன்னனின் வேண்டுகோளின்படி தில்லையம்பதியிலுள்ள அறையில் வைக்கப்பட்டிருந்த ஏடுகளை எடுத்து திருமுறைகளாக வகுத்தார். அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்ததோடு அப்பொழுதிருந்த ஏனைய அருட்பாடல்களையும் சேர்த்து எல்லாவற்றையும் பதினொரு திருமுறைகளாக வகுத்தார். நம்பி தான் இயற்றிய நூல்களையும் அரசனின் வேண்டுகோளின்படி பதினோரந் திருமுறையிற் சேர்த்தார். பின்பு சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

இறைவனின் வழிபாட்டின்போதும் சைவசமய நிகழ்ச்சிகளின் போதும், திருமுறை ஓதுவது சைவசமய மரபாகும். இச்சந்தர்ப்பங்களில் பஞ்ச தோத்திரமே ஓதுவார்கள். அவற்றைத் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்ற வரிசையில் ஓதுவார்கள். இப்பொழுது அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழை இறுதியாக ஓதுகிறார்கள். திருமுறைகளைத் வகுத்தபோது திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண்ணொருத்தியைக் கொண்டு பண் வகுத்துள்ளனர். பஞ்ச தோத்திரங்களை அடியார்கள் ஓதும்போது பாடல்களுக்காக வகுக்கப்பட்ட பண்ணோடு பொருள் பிழையறா வண்ணம் ஓதுவது சாலச்சிறந்தது. பஞ்சதோத்திரம் ஓதினால் பன்னிரு திருமுறைகளை ஓதிய பயன் கிடைக்கும்.

# பஞ்ச தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே

### திருவாசகம்

நெறியில்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோ

### திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்கமாலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத் திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளங்குளிர என்கண் குளிர்ந்தனவே

### திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்த வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு ஆட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்த பொருள் அளவில்லாதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர் கண்மழை பொழிந்தார் வானவர் பூமழை சொரிந்தார்
அண்ணல் அவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதி விடங்கப் பெருமானே

### திருப்புகழ்

இசைந்தஏறும் கரியுரிபோர்வையும் எழிலநீறும்
இலங்குநூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்தஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்தசூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்தபாசம் கயிறொடுதூதுவர் நலியாதே
அசந்தபோது என்துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமானே

திருச்சிற்றம்பலம்

நன்றி தெய்வ தரிசனம் இதழ்